உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உகூ.] பிரஜோத்பத்தி௵ ஆனிமீ [பகுதி-அ.
Vol. XXIX. June-July-1931. No. 8.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(உ௨0-ஆம் பக்கத் தொடர்ச்சி).

வாலி தத்துவஞானம் பெற்றதனால் உற்ற நன்மைகளை உரைத்தல்.

["இராமமூர்த்தீ, நீ எனக்கருளிய ஞானதிருட்டியினால், நீ யாவனென்றும் உன் தன்மை இதுவென்றும் தெரிந்துகொண்டேன். அதனால் அரியவற்றுள் அரியதான முத்தியை எளியவற்றுள் எளியதாக எய்தினேன். காணப்படும் நீதி, காணப்படாத எப்பொருளின் இயற்கைக்குணமென்று உலகத்தார் அநுமானமாக அறிகிறார்களோ, அப்பொருளேயான உன்னை அந்த ஞானதிருட்டியால் யான் பிரத்தியட்சமாகக் காணலானேன். இந்தக் காட்சிக்கு ஏற்றமான காட்சி ஏதும் இல்லை. உன்னால் அநுக்கிரகிக்கப்பெற்றார் அடைவதும் முத்தியே. நிக்கிரகிக்கப்பட்டார் அடைவதும் முத்தியே. நிக்கிரகவாயிலாக எனக்கு முத்தி சித்திக்கச் சித்தம்வைத்தருளினாய்.

என் தம்பி, வெற்றரசைத் தான் அடைந்து, வீட்டரசை
யான், அடையவிட்டா னெனல்.

என்னைக்கொல்ல, உன்னைக்கொணர்ந்த என் தம்பி, அநித்தியமான வெற்றரசைத் தான் அடைந்து, நித்தியமான வீட்டரசை யான் அடைய விட்டான். அவன் செய்த உதவியினும் சிறந்தஉதவி யில்லை"]

*

என் தம்பி தவறியற்றினாலும் என்மேலேவிய காலபாணத்தை ஏவாதே எனல்.

484 "ஓவிய உருவ, நாயேன் உளதொன்று பெறுவ துன்பால்:
பூவியல் நறவம் மாந்திப் புந்திவே றுற்ற போது,
தீவினை இயற்று மேனும், எம்பிமேற் சீறி என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல்" என்றான்.

இ - ள். "நாய்போலும் கடையேன் உன்பால் பெறும் வரம் ஒன்று உண்டு. (அது யாதெனில்,) என் தம்பி, (இயல்பாக நற்குணமுடையவன். ஆயினும், அவன்) கள்ளைக்குடித்துப் புத்தி (சுபாவம்) மாறி (மயங்கி) ய போது குற்றஞ்செய்வானானால், அவன்மேற் கோபித்து, என்மேலேவிய காலபாணத்தை ஏவாதிருப்பாயாக (என்பது)" என்றான் (வாலி, இராமனை நோக்கி).

ஓவியம் - சித்திரம். உருவம் - வடிவம். ஓவிய உருவ - சித்திர(த்தில் விளங்கும் சிறந்த வடிவம்போல அழகிய) வடிவமுடையானே. இயல் - பொருந்திய. நறவம் - மது - கள். மாந்தல் - குடித்தல். புந்தி - புத்தி. வேறுறல் - மாறுபடல். இயற்றும் - இயற்றுவான் — செய்வான். எம்பி - என் தம்பி. பகழி - அம்பு. காலன்போலத் தப்பாதுகொல்லும் பாணத்தை, உரையில், காலபாணமென்றது கையடைப் படலம் 'எண்ணிலா' என்ற பாட்டில் வரும் 'காலவேல்' போல்வது.

'உளது ஒன்று பெறுவது உன்பால்' என்பதை உன்பால் பெறுவது ஒன்று உளது என முழுதும் வரிசையாகப் பின்முன்னாக மாற்றாக, வசனநடைக்கு முற்றும் மாறாய், வார்த்தைகள் அனைத்தும் முறையாகப் பின்முன்னாக அமையப் பாடியுள்ள 'உளதொன்று பெறுவதுன்பால்' என்ற வாக்கியத்தின் சொற்கிடக்கைமுறை வியந்து நோக்குதற்குரியது. சிறந்த செய்யுள்நடை, அதன் எளிமையும் தெளிவும் காரணமாக, செய்யுள்நடையென்ற நினைவே எழாதவாறு நிகழ்தற்குச் செய்யுளகமாயுள்ள இவ் வாக்கியம் ஏற்றதோர் உதாரணமாயிருத்தல் காண்க.

சீறி என்பது, எம்பிமேற் சீறி, என்மேற்சீறி என இயைத்தற்குரித்தாகநிற்றல் கவனிக்கத்தக்கது. இப்படி நிற்பது, அலங்காரத்தில்

'நடுநிலைத்தீபகம்' என்றும், பொருளின்கோளில் 'தாப்பிசை' என்றும், சூத்திரநிலையில் 'சிங்கநோக்கு' என்றும் கூறப்படும்.

வாலி, தன்னைக் கொல்வித்த தம்பியை மன்னித்ததேயன்றி, வாளி துளைக்கும் மாணவேதனையினால் வருந்தும்போதும், மறதியுறாது, தம்பி நன்மையை நாடி வரம்வேண்டினனெனக், கன்னெஞ்சு படைத்தாரும் கனிந்துருகிக் கண்ணீர் சொரியும்படி வாலியின் பேரன்பும், பெருந்தகைமையும் விளங்கக் கூறியிருக்கும் வித்தகக் கவிநயம் மிகவும் பாராட்டத்தக்கது.

இராவணனை, வாலாற்பற்றிவந்து, இராமனிடம் ஏற்பியாமைக்கு இரங்கல்.

["யான், உனக்கு வேறு பேருதவி யாதெனினும் செய்யும் பெரும்பேறு பெற்றிலேனெனினும், வஞ்சக ராவணனை வாலினாற் சுற்றிப் பற்றிக்கொணர்ந்து பாதகாணிக்கையாக உன்திருமுன்னர் வைத்துக் குரக்குசெய்யக்கூடிய சிறுதொண்டுசெய்யும் சிறுபேறும் பெற்றேனில்லை; செய்யாது கழிந்த செயலைப்பற்றிப் பேசலாற் பிரயோசனமில்லை. ஆதலின் இது நிற்க.

அநும சுக்கிரீவர் ஆற்றல் சாற்றல்.

இனி எந்தக் காரியமேனும் செய்யவேண்டிய தேற்பட்டால், அதனைச் செய்யத்தக்க அறிவும் ஆற்றலும் உடையன் அநுமன். சுக்கிரீவனும் அநுமனும் போன்ற துணைவர் வேறு யாருமிலர். இவர்களால் உனது தேவியைத் தேடி அடைந்து சிறப்புடன் வாழ்வாயாக" என்று கூறினன்.

தம்பிக்கு நன்மதிகூறி இராமனுக்கு அவனும் சுற்றமும் அடைக்கலமெனல்.

பின்பு தம்பியை அருகில் அழைத்துத் தழுவி அணைத்து "உனக்கு உறுதியானதொன்றை உரைக்கின்றேன் உற்றுக்கேள்" என்றபோது, அண்ணனது அன்புமிகுதியை அறிந்து, அகம் மிக நெகிழ, ஆற்றொணுத் துக்கம் மிக்கு, அழுது வருந்தும் தம்பியை "வருந்தாதே" என்று வருத்தம் மாற்றி "வேதவேதாந்தங்கள், இதுவே முடிவான மெய்ப்பொருளென்று, துணிந்துகூறும் பரம்பொருளே, கோதண்ட

ராமனாகத் தருமநெறியை நிலைபெறச்செய்ய, அவதரித்திருக்கிறதென்பதை அணுவளவும் ஐயமின்றி அறிவாயாக. என்னைப்போல நித்தமும் ரோகத் தீமையும் மறைவாக வஞ்சகமும் செய்தாரும், இவன் அம்பால் இறப்பாரேல் ஈசனும் எடுப்புமில்லாத வீடு பெறுவரென்றால், உன்னைப்போலத் திருவடித்தொண்டுசெய்வார்பெறும்பேற்றைப் பேசவேண்டுமோ? நீ தேடிப்போய் அடையவேண்டிய இறைவன் தான் தேடிவந்து உன்னை அடையப்பெற்றாய்! ஊழே உதவிடில், யாதே அரியது! நீ முன் செய்த தவப்பயனாக, ஈசனே ராசனான இவனுக்கு அடியனாகி இருமைப்பயனையும் ஒருமிக்க அடைந்தாய். இவன் காலா விட்ட கட்டளைகளைத் தலையாற் செய்து அபாயம் உற்றால், ஆருயிர்கொடுத்து உதவுவாயாக. நீ இராசனெனினும் இவனுக்கு அடிமையென்பதை என்றும் மறவாயாக' என்று நன்மதிகூறியபின், இராமனைநோக்கி "இவனும் இவன் சுற்றமும் உனக்கு அடைக்கலம்" என்று கும்பிட்டுக்கூறினான்.

அங்கதனை அழைப்பித்தல்.

பின்பு தம்பியைநோக்கி "உன் செல்வச் சிறுவனையிட்டுவா" என, அவன் கொணர, அங்கதன் வந்தான்.]

அங்கதன் வரவும் அவன் கண்ட காட்சியும்.

485 சுடர் உடை மதியம் என்னத் தோன்றினன். தோன்றி, யாண்டும்,
இடர் உடை உள்ளத் தோரை எண்ணினும் உணர்ந்திலாதான்,
மடல் உடை நறுமென் சேக்கை மலையன்றி, உதிர வாரிக்
கடலிடைக் கிடந்த காதற் றாதையைக் கண்ணிற் கண்டான்.

இ-ள். (வெண்ணிறமுடைய அங்கதன்,) ஒளியுடைய (வெண்) மதி (வந்தாற்)போல வந்தான். துன்பமுடைய மனத்தினோரை (க்கண்டறியாதவனாய்த், துன்புடையார் இப்படி யிருப்பரெனச் சொல்லக்கேட்டபோது, அவர்கள் நிலைமையை மனத்தினாற் பாவித்தறிய முயன்று, எண்ணி) எண்ணிப்பார்த்தாலும், தெரியமாட்டாத (பாலப்பருவமுடைய அ)வன், (சற்றுமுன்பு, சுக்கிரீவனோடு போர்புரியப் புறப்படுமுன் படுத்திருக்கப் பார்த்த) மலர்மெத்தைமலைமேலன்றி, இரத்தவெள்ளக் கடலுக்குள்ளே கிடந்த பிதாவைக் கண்டான். (அவன் பரிதாபநிலை பாவித்தற்பாலதன்றிப் பகரற்பாலதன்றென்றபடி.)

சுடர் உடை மதியம்—ஒளி உடைய சந்திரன். யாண்டும்—எப்பொழுதும்—எக்காலத்தும். இடர்—துன்பம். உடை—உடைய. எண்ணினும்—எண்ணினாலும்—நினைத்தாலும். உணர்கிலாதான்—உணரமாட்டாதவன். மடல்—பூஇதழ். நறுமை—நன்மணம். சேக்கை—படுக்கை. உதிரம்—இரத்தம். வாரி—வெள்ளம்—பெருக்கு. காதல்—அன்பு. காதல் தாதை—தான் அன்புவைத்திருக்கும் தந்தை; தன்பால் அன்பு வைத்திருக்கும் தந்தை. மடருடை, கடரிடை என்பனவும் பாடங்கள்.

'இடருடை உள்ளத் தோரை எண்ணினும் தெரிகிலாதான்' என்பதன் பொருள் 'துன்பமுள்ள மனத்தையுடையவரை மனத்தினால் அறிந்து மிலாதவன்' என்பது முந்திய உரை.

தன்னொடு தொடர்பில்லாத பிறர்துன்பத்தை எண்ணிப்பார்க்க முயன்றாலும் அறியாத பாலப்பருவமகலாத பச்சைப்பிள்ளை தன் பிதாவே மரணவேதனையுறும் நிலையிலேயிருக்கப் பார்த்தானென, நயம்பட, நடந்ததை நடந்தவாறு கூறும் தன்மைநவிற்சியாக, மிக்க இரக்கம் பிறக்க உரைத்த கவித்துவம் மிகவும் பாராட்டத்தக்கது.

தன்மைநவிற்சி, புனைந்துரை என்ற ஒன்றற்கொன் றெதிரிடையான இருவகை அலங்காரங்களுள் முன்னதைக் கொள்ளுவதும் பின்னதைத் தள்ளுவதும் தற்கால விற்பனர் பற்பலர் செயலாயிருப்பது நியாயமன்றென்பது நினைவுக்கு வந்ததனால், நயம்படக்கூறும் தன்மைநவிற்சி யெனப்பட்டது. நயம்படக்கூறாத தன்மைநவிற்சி அலங்காரமாகாது. நாற்காலிக்கு நாலுகால், நாய்க்கு ஒரு வால் என்பவைபோன்றவை சுவையற்ற வெறுமையான தன்மைநவிற்சியாமன்றிச் சுவைபெற்ற அலங்காரத் தன்மைநவிற்சி ஆகாதென்பது கூறாமலே விளங்கும். உண்மைக் கவிகளாயுள்ளார் தன்மைநவிற்சியலங்காரமாக உரைப்பதை உணர்வோர், 'இதிற் கூறப்பட்ட தன்மைநவிற்சியைத் தெரிந்திருக்க வேண்டிய நாம் இதுகாறும் தெரியாதுபோனோமே, இதனை அறிய எவ்வளவு இன்பமாயிருக்கிறது' என எண்ணி, மனமுருகி மகிழுறுவர். அத்தகைய தன்மைநவிற்சி யலங்காரம் 'இடருடை உள்ளத்தோரை எண்ணினும் தெரிகிலாதான்' என்றதன்கண்ணே இனிதமைந்திருக்கின்றது. பாலப்பருவத்தில் துன்பம் அறியாமல் வளர்க்கப்பட்ட புத்தபகவான்போலத் துன்பம் அறியாத சிறுபிள்ளைகள், துன்புற்றார்

இப்படியிருப்பரெனச் சொல்லக்கேட்டபோது, அதனைத் தெரிந்து கொள்ளமாட்டாமல் திகைக்குந்தன்மையை அதி உசிதமான அமயத்தில் அங்கதன்மேலேற்றிக்கூறிய அருமையான கவிசதுரியம் ஆச்சரியமும் ஆனந்தமும் ஒருங்குபயப்பதாயுள்ளது.

வாலி மீது அங்கதன் வீழ்தல்.

[சந்திரன் தரையில் வீழ்ந்துகிடக்க, அதன்மேல் நட்சத்திரம் வீழ்ந்ததுபோல வாலிமீது அங்கதன் வீழ்ந்தான்.]

அங்கதன் புலம்பல்.

இயமன் உன்னை அஞ்சாம லணுகினனே! என்று புலம்பல்.

486 "எந்தையே! எந்தையே! இவ் எழுதிரை வளாகத் தியார்க்கும்
சிந்தையால் செய்கை யாலோர் தீவினை செய்தி லாதாய்!
நொந்தனை! அதுதான் நிற்க. நின்முகம் நோக்கிக் கூற்றம்
வந்ததே யன்றே! அஞ்சா தாரதன் வலிமை தீர்ப்பார்!"

இ - ள். என் ஐயாவே! என் ஐயாவே? இந்தப் பூமியிலே யாருக்கும் எண்ணத்தினலும் (சொல்லினலும்) செயலினலும் ஒரு தீங்கும் செய்யாதவனே! (அப்படித் தீங்குசெய்யாத நீ, தீங்கு செய்யப்பட்டாய்! என்ன ஆச்சரியமான அநியாயம்! இதுகாறும் எதிரிகள் செய்த தீங்குகளால்—அவை உன்னை ஊறுபடுத்தமாட்டாமையால்—வருந்தினையில்லை. அப்படிப்பட்ட நீ இப்போது ஊறுபட்டு) வருந்தினய்! (என்ன பரிதாபமான ஆச்சரியம்!). (வருந்தற்பாலனல்லாத நீ) வருந்தினதிருக்கட்டும். (நீ வருந்தினல் என்னை? வலிபற்றுச் சாகக்கிடக்கும் புலியையும் ஆடு காண அஞ்சுமன்றே, அதுபோல, இயமன், உன்னை நொந்த நிலையினும் காண அஞ்சுவானே. அவன், உன்னைக் காண்பது கிடக்க, உன் பேர் கேட்டாலும் அஞ்சினவனன்றோ. அந்த) இயமன் உன் முகத்தை அஞ்சாமல் (அணிந்து, நோக்கி (எதிரேறிக், கிட்டவும்)வந்து விட்டானே! (ஆ! முன் காலத்தில் உன் போல அவன் அஞ்சும் ஆற்றலுடையாய் வாழ்ந்த இரணியன், சூரபன்மன் முதலிய அநேகர் அந்தியகாலத்தில் அவனுக் கிரையாயினரன்றே!) அவன் வலிமையை ஒழிக்க வல்லார் யார்? (ஒருவருமில்லை).

எந்தை - என் தந்தை. திரை - கடல். வளாகம் - இடம். எழு திரை வளாகம் - ஏழு கடல் சூழ்ந்த இடமாகிய பூமி. அது - நொந்தது. 'சிந்தையாற் செயலால்' என்றதனால் 'சொல்லால்' என்பது உபலக்கணமாக உரையில் வருவித்துக்கொள்ளப்பட்டது.

வாலி சுக்கிரீவனை நாட்டைவிட்டுத் துரத்தி அவன் சொத்துக்களையும் மனைவியையுங் கவர்ந்த தீய செயல்களை அங்கதன் அறிந்திருப்பானன்றே: அறிந்திருந்தும், 'யார்க்கும்—சிந்தையாற் செய்கையாலோர் தீங்கொன்றும் செய்திலாதாய்' என்றதெதனாலென்றால், வாலியின்சார்பினர்மத்தியில் வாழ்ந்த அங்கதன, அவர்கள், தம்முள்ளே சுக்கிரீவன் துரத்துண்டு அவன் மனைவி கவரப்பட்டமைபற்றிப் பேசுங்கால், அச்செயல்கள், பகைவர்சொத்துக்களையும் அவர் மனைவியரையும் பறித்துக் கொள்ளல் தருமமாதலால், நியாயமானவையெனக் கேட்டிருந்ததனாலெனக.

வாலியின் வால்வலிகூறிப் புலம்பல்

487 "தறையடித் ததுபோல் தீராத் தகையஇத் திசைகள் தாங்கும்
கறையடிக் கழிவுசெய்த கண்டகன் நெஞ்சம், உன்றன்
நிறையடிக் கோல வாலின் நிலைமையை உன்னுந் தோறும்,
பறையடிக் கின்ற அந்தப் பயம், அறப் பறந்த தன்றே!"

இ - ள். "(ஆணி) தறையடிக்கப்பட்டது (இடம்விட்டுப் பெயராதது)போல (எட்டுத் திசைகளிலும் பூமியைத் தாங்கிக்கொண்டு, நிற்கும் இடத்தினின்று) நீங்காத தன்மையுடையன(வாக) இந்த (ப் பூமியின் எட்டு) த் திசைகளையும் தாங்குகின்ற யானைகளுக்குத் தோல்வியை உண்டாக்கிய இராவணனது நெஞ்சு, (அவனைச்சுற்றிக் கட்டித் துன்புறுத்திய) உன வாலை நினைக்குந்தோறும் (படபடென்று) பறையடிக்கும் பயம்முழுதும் (இருந்தஇடந் தெரியாமல்) பறந்துபோய்விட்டதே!"

'இந்த ஏடு எழுதினது அந்த ஏடு எழுதாதது' என்பதில், 'எழுதினது'ம் 'எழுதாதது'ம் போலத், 'தறையடித்தது,' படுவிகுதி தொக்கு வந்தது. தீர்தல் - நீங்குதல் - நிலைபெயர்தல். தகை - தன்மை. கறை— உரல். கறை அடி - உரல்போலும் கால். கறையடி அன்மொழித் தொகையாய் உரல்போலும் காலையுடைய யானையை உணர்த்தியது.

கண்டகம் - முள். கண்டகன், முள்போலத் தேவர்களுக்கு உபத்திரவஞ் செய்த இராவணனைக் குறித்தது. நிறை அடி கோலம் வால் — (பலம்) நிறைந்த அடியையுடைய அழகிய வால். நிலைமை - தன்மை. நெஞ்சு பறையடித்தல் - நெஞ்சு பயத்தினால் துடித்தல். அற - முற்ற - முழுதும். கறையடிக்கிழிவு, நெஞ்சமூன்ற, பறையடிக்கின்றது என்பவையும் பாடங்கள்.

இராவணன் திக்குவிசயஞ்செய்தகாலத்தில், திசையானைகள் அவன் மார்பிற் பாய்ந்து கொம்பு முறிந்து பங்கமுற்றதை யுட்கொண்டு 'கறையடிக் கழிவு செய்த' என்றான்.

தன்னை யெதிர்த்துத் தாக்கிய எட்டுத் திசை யானைகள் கொம்பு முறிந்தனவேயன்றித் தான் ஊறுபடாத மகாபலசாலியும் திக்குவிசயஞ் செய்து திரிலோகங்களையும் செயித்துத் தன்னடிப்படுத்தியவனுமான இராவணன், வாலியினது பகைவரைத் தாக்கும் உறுப்புக்களுட் சிறந்த வாலை நினைத்தபோது அஞ்சி நெஞ்சு துடிதுடிப்பானானால் வாலியினது கரசரணாதி மற்றைப் பெரிய உறுப்புக்களின் வலிமையின் பெருமையை என்னென்பது! என்பது குறிப்பு:

கயிலாயபதி காலினாலடக்கிய இராவணேசுரனை வாலி வாலினாலடக்கினானென, வாலி வாலின் வலிமை இந்தக்கவியில், இனிதெடுத்துக் கூறப்பட்டது. இதைத்தொடுத்து, அடுத்த கவியில், அவன் கால்வலிமையும் கைவலிமையும் கூறப்படுகின்றன.

வாலியின் கால்வலியும் கைவலியும் கூறிப் புலம்பல்.

488 "குலவரை நேமிக் குன்றம் என்றுவான் உயர்ந்த கோட்டின்
தலைகளும், நின்பொற் றாளிற் றழும்பினித் தவிர்ந்த வன்றே;
மலையுடன் அரவும் மற்று மதியமும் பலவும் தாங்கி
அலைகடல் கடைய வேண்டின், ஆர்இனிக் கடைவர்! ஐயா."

இ-ள். "ஐயா! (பூமியின் மத்தியப் பிரதேசங்களிலுள்ள மலைகளிலே உயர்ந்தனவாயுள்ள அட்ட) குலபருவதங்கள் (பூமியின் சுற்றுப் பிரதேசத்தில் உள்ள) சக்கரவாளகிரி என்று (பேர் சொல்லப்பெற்று) வானம்போலுயர்ந்த மலைகளின் தலைகள் (நீ, தினந்தோறும் சிவபூசை செய்ய, நாற்றிசைச் சமுத்திரங்களுக்கும், ஒரு மலையுச்சியினின்று மற்றொரு மலையுச்சிக்குத் தாவிக், குதித்துச் செல்லும்போது,) உன் அழ

கிய கால் (பட்டுண்டாம்) தழும்புகளே, இனி நீங்கினவையாமன்றே (நீ இறந்ததனால்). (மத்தாக) மந்தரமலையும் (கடைகயிறாக வாசுகிப்) பாம்பும் (அடை தூணாகச்) சந்திரனும் வேறு (உபகரணங்கள்) பலவுங் கொண்டு (அமுதம் கடைந்தெடுத்தற்கு வலிமைபடைத்தவன் நீ ஒருவனே யிருந்தாய்! நீ இறந்ததனால்), இனிமேல் அலைகடலைக் கடை(ந்து அமுதத்தை அடை)ய (அமரர் திரும்ப) விரும்பினால், யார் கடைவார்?"

நேமிக்குன்று—சக்கரவாளகிரி. என்று—என்று சொல்லப்பட்டு. கோடு—மலை. தலை—உச்சி. தலைகளும் என்பதில் உம்மை உயர்வுசிறப்பு. வான்•உயர்—'வானம்போலுயர்ந்த' (வானுயரென்ற குறளுரை). மற்றும் பலவும் என இயைக்க. மற்றும் பலவும் என்றவை, "ஸ்ரீ கூர்மமாகிய அடைகல், ஔஷதிகள் முதலியவை." தழும்பினிற்றவிர்ந்த, மலைகளும், மலைகொளும் என்பனவும் பாடங்கள். சிவபூசை செய்வோர், பூசை செய்யக்குறித்த இடத்திலுள்ளேதானே, சிவனைத் திசைமுடிவுகளில் வீற்றிருப்பதாகப் பாவனையால் தாபனஞ்செய்து பூசனை புரிவர். வாலியோ, அப்படியன்றித் தனது சிவபூசை முடித்தற்குத் தினந்தோறும் திசைமுடிவுகளுக்கே சென்று திரும்புவான். அப்படிச் சென்று திரும்பும்போதெல்லாம், வேகமாகத் தாவிக் குதித்துச்செல்லும் அவன் கால்பட்டுக் கருங்கல்மலைகள் வடுப்பட்டன வென, அவன் காலின் கடுமையும் கடினமும் ஒருங்கு விளங்கக், 'குலவரை நேமிக் குன்றம் என்று வானுயர்ந்த கோட்டின்—தலைகளும் நின்பொற் றாளின் தழும்பினித் தவிர்ந்த வன்றே' என்றான்.

தேவரும் அசுரரும், சாதற் கஞ்சிச் சாவாமருந்தென்னும் தேவாமிருதத்தைப் பெற விரும்பித், திருப்பாற்கடலிலே ஆதிசேஷ சாயியாக அறிதுயிலமர்ந்த திருமறுமார்பனை அடைந்து, வணங்கி,

"ஒண்தளிர்ச்சரணஞ்சரணமென் றடைந்தேம். உலப்பினைக்கடக்குமாறெமக்குத் தண்துழாய் அலங்கற் கருணையங் கடலே, சாற்" றென, நாரணன் எழுந்து†

"மத்து மந்தரம், வாசுகி கடைகயி, றடைதூண்
மெத்து சந்திரன், சுராசுரர் வேறுவே றன்ன
கொத்தி ரண்டுபோல் வலிப்பவர், ஓடநீ கொடுத்துக்
கத்து வாரிதி மறுகுற, அமுதெழக் கடையின்"*

†காஞ்சிப்புராணம் மணிகண்டேச்சரப் படலம். *அகலிகைப்படலம்.

என்று பணித்தருள, அவர்கள் அவ்வாறு செய்யத் தொடங்க, அவன்,

இருதிறத் தவருள் வான்சுவை அமிழ்தம் எறுழினுற் கடைந்தெடுத் தவரே,
பருகிடத் தருமால்; ஏனையோர் எய்தற் பாலதன் றென்பது கேட்டுப்,
பொருதிறல் அசுரர், மகிழ்ந்தெழுந் தார்த்துப், பொறியரா இருபுடை பற்றித்
தருவலி மிகையால் ஈர்த்தனர்: அசலம், தன்பெயர் நாட்டிய தன்றே. †

இயக்கல்ஆற் றுமை இளைத்ததா னவரை, எதிருறுங் கடவுளர், நோக்கி,
வியத்தக எழுந்து, "நீர் இனி விடுமின் விடுமின்" என் றெய்தி, வா சுகியை
வயத்துடன் பற்றி ஈர்த்தனர். அவரும், வலிஇழந் தெய்த்தனர், நின்றார்.
செயத்தகும் திறம்வே தினியென யாரும் சிந்தையிற் கவலைகூர் பொழுது †

தினந்தோறும் திசைக ளனைத்தினுக்கும் சென்று சிவபூசை செய்து வரும் வாலி அவர்கள் நின்ற திக்குநோக்கி வர, அவர்கள், அவனை எதிர்கொண்டு சென்று, வரவேற்று, முகமன்மொழிந்து, அதுவரை நிகழ்ந்ததை உள்ளவா றுரைத்துக் "கருதரும் தெய்வம் இங் குன்னைத் தந்ததால், எமக்கு நீ துணைசெய்யத்தகும்" † எனப்,

"பெருவலி படைத்த சுராசுரர் குழுமிப் பெறலருந் திறத்தினில் எளியேன்,
ஒருவனே, வல்லேன், யாமெலாம் ஒருங்குற் றுததியைக் கடைதுமேல், தெய்வம்
தருவது காண்டும்" எனநகைத் தியம்பித், "தானவர் கடவுள ரெல்லாம்
வருகென" விளித்து, வாலி, மா சுணத்தின் வாற்புறம் பற்றிநின் றீர்த்தான். †

பருங்கொலைப் படத்தை அசுரரும் சுரரும் பற்றினர் தனித்தனி ஈர்த்தும்,
ஒருங்குநின் றீர்த்தும் ஆற்றலா துடைந்து தன்புடை ஒதுங்குதல் காணூஉக்
கருங்கழல் வாலி, "விடுமின்நீர்" என்னாக் கட்செவி வாலமும் பணமும்
இருங்கையிற் பற்றி, முறுகுற வாங்கி ஈர்த்தனன், கடைந்தனன் புணரி. †

என்றவாறு, அசுரர்கள் சுரர்களாகிய இருபெருங் குழுவினரும் ஒருங்கு முயன்றும் ஒருபாதியும் செய்யமுடியாத அமுதமதனமாகிய அரும் பெருங்காரியத்தைத் தானொருவனே தனியனாய்ச் செய்துமுடித்த வாலி இறந்தானாதலால், கடல்கடையவல்லார் எவரும் இலரே! யென்றிரங்கு வான் "அலைகடல் கடைய வேண்டின், ஆர் இனிக் கடைவர் ஐயா!" என்றான்,

மூன்போல, அமுதங் கடைந்தெடுத்தற்குப், பாற்கடலும், மந்தாம் வாசுகியாதிய உபகரணங்களும், யாதுங் குறைவின்றி, எல்லாமிருந்தும், வாலி ஒருவனில்லாத ஒரே ஒரு குறையினால், அந்த அமுத மதனம்

† காஞ்சிப்புராணம் மணிகண்டீச்சரப் படலம்.

நிரந்தரமாக அசாத்தியமாய்விட்டதென்பது மிகவும் தெளிவாக விளங்க, 'அலைகடல் கடைய வேண்டின், ஆர் இனிக் கடைவர்! ஐயா!' என்று மட்டுங் கூருமல், 'மலையுடன் அரவும் மற்றும் மதியமும் பலவுந் தாங்கி, அலைகடல் கடைய வேண்டின், ஆர் இனிக் கடைவர்! ஐயா!' என்றானென்க.

வாலி ஒருவர் உதவியுமன்றித் தானொருவனே தனியனாய்க் கடல் கடைந்து அமுதமெடுத்த அரிய பெரிய கிரியை, அவன் வழிபடு கடவுளான மகாதேவன் சருவசங்காரகாலத்தில் தன்னந்தனியனாய்ச் சகல புவனங்களையும் தகனம்புரிதல்போலு மெனலாம்.

வாலியின் பரமசிவபத்தி, பரமன்னரைப் பணியாமை, பராக்கிரமம், பரமோதாரசீலம் இவைகளை எடுத்துக்கூறி இரங்கல்.

489 "பஞ்சின்மெல் லடியாள் பாகன் பாதுக மலதி யாதும்
அஞ்சலித் தறியாச் செங்கை ஆணையாய்! அமரர் யாரும்,
எஞ்சல ரிருந்தா, உன்னால். இன்னமு தீந்த நீயோ,
துஞ்சினை! வள்ளி யோர்கள் நின்னில்யார் சொல்லற் பாலார்!"

இ-ள். "உமாபதியின் பாதுகையை (க்கும்பிடுவதே) யன்றி (வேறு) எப்பொருளையும் கும்பிட்டறியாத (சிறப்புடைய) செங்கையில் ஆஞ்ஞாசக்கரமுடையவனே! உன்னால் (கொடுக்கப்பட்ட அமுதத்தை உண்டதனால்) தேவரெல்லாரும் செத்துவிடாமற் (சிரஞ்சீவியாய்ச்) சீவித்திருக்கின்றார்கள். (அவர்களைச்சாகாமற்காத்த) இனிய அமுதத்தை (அவர்களுக்கு) ஈந்த நீயோ, இறந்தாய்! (இத்தகைய) உன்னைப்போல உபகாரிகளாகச் சொல்லத்தக்கார் யாருளர்!" (எவருமிலரென்றபடி).

பஞ்சின் மெல் அடியாள் பாகன் - பஞ்சுபோல மென்மையான பாதங்களையுடையவளான பார்வதி (தேவிக்கு இருப்பிடமான இடப்) பாகத்தையுடைய பரமசிவன். பாதுகம், பாதுகை, பாதகுறடு என்பவை ஒருபொருட் பெயர்கள். ஆணை, ஆகுபெயராய் ஆஞ்ஞாசக்கரத்தை உணர்த்தியது; ஆணும் அதிகாரமுமாம் (தமிழ்ச்சொல்லகராதி). எஞ்சல் - இறத்தல். (ஷ). துஞ்சல் - இறத்தல். வள்ளியோர் — கொடையாளர் - வள்ளல்கள். மேலே எடுத்தாண்ட 'மத்து மந்தரம்' என்ற பாட்டில் 'வலிப்பவர்' என்பதன்பின் 'ஆக' தொக்கதுபோல, 'வள்ளியோர்' என்பதன்பின்னுந் தொக்கது. சொல் - புகழ். சொல்லல்,

கூறுதலன்றிப் புகழ்தலுமாம். அடியாள் பங்கன், பதயுகம், அலதி யாவும் என்பனவும் பாடம்.

வாலியினது இராச்சியாதிகார கவுரவம் விளங்கச், செங்கையாய் என்றுகூறினமையோடமையாமல், செங்கை யாணையாய் என்று கெம்பீரமாகக் கூறினன். இக்காலத்துமட்டுமன்றி, முன் எக்காலத்தும் அஞ்சலியாத செங்கை என்பான் அஞ்சலித்து அறியாச் செங்கை என்றான். வாலி, தன் வழிபடுகடவுளான மகாதேவனுக்கு எவ்வளவு மிக்க பணிவுடையனென்பது விளங்க, அந்தப் பரமனையன்று, அவன் அங்கம் அனைத்தையும் சுமந்து, கீழாய்த் தாழ்வாயிருக்கும் பாதத்தையுமன்று, அப் பாதத்துக்குங் கீழாய்த் தாழ்விலுந் தாழ்வான பாதுகையைப் பணிவதேயல்லாமல் (தேவர் அரசர் முதலிய வேறு உயர்ந்த பொருள்) எதனையும் பணியான் என்பானாய்ப் 'பாதுகமலதி யாதும் அஞ்சலித்தறியா' என்றான்.

ஆணையாய் என்பதுபற்றி மேலே கூறியதன்றி, வாலி, மறுமன்னரை வணங்காத மாட்சிமையோடு, அவரைத் தனது ஆணைக்கு அடங்கி வாழச்செய்த பராக்கிரம மாட்சிமையும் உடையானென்பது விளங்க, ஆணையாய் என்றானென்பதும் பொருந்தும்.

வாலி பத்தியும் பராக்கிரமும் செய்தலில், முறையே, அத்தியந்தமான தாழ்வுணர்ச்சியும் உயர்வுணர்ச்சியுமுடையானென, இரண்டு எதிரிடைப்பொருள்கள் ஒன்றையொன்று மேம்படுத்துமாறு இரண்டையும் இணைத்துக்கூறிய நயம் அளப்பருங் களிப்பை அளிப்பதாயுள்ளது.

தேவரை, வானவர் முதலிய பெயராற்கூறாது, சாவாதவர் என்று பொருள்படும் அமரர் என்று, இந்தச் சந்தர்ப்பத்துக் கியைந்தபெயராற் கூறியிருப்பது குறிக்கத்தக்கது.

புலப்படும் பொருள்களாய், இந்தச் சூரியப்பிரபஞ்சம்* என்னும் அண்டத்தை யுள்ளிட்ட அகிலகோடி அண்டங்களுக்கும் மூலமாய்ப் புலப்படாப்பொருளான பரம்பொருளொன்றே, என்றும் அழியாப் பொருளாயிருக்கத், தேவரை 'அமரர்' என்ற தென்னெனில், உயிரோடிருந்த வாலியை அவன் சிறிதுபொழுது கழியுமுன் செத்துவிடுவானென்பதுபற்றித் 'துஞ்சினை' என்றதுபோல, மனிதர்போலவேமாள்வாரெனினும், நெடிதுவாழ்வாரென்பதுபற்றி 'அமரர்' என உண்மையாகவன்றி உபசாரமாகக் கூறியதென்க.

* Solar Universe.

வாலி கொடுத்த அமுதத்தால் சாவாதவரான தேவர், ஒருவான்று இருவர் மூவர் முதலிய சிறுதொகையினான்று, மிக்க பெருந்தொகை யினராய் முப்பத்துமுக்கோடிய ராவர். அத்தனைபேருள், ஒருவரும் சாவவில்லை: எல்லாரும் சிரஞ்சீவியா யிருக்கின்றா ரென்பதுபற்றி 'அமரர் எஞ்சலர்' என்னாது 'அமரர் யாரும் எஞ்சலர்' என்றான்.

அமுதம் கொண்டவர் எண்ணிறந்தவருள் எவரும் இறவாராய் இன்புற்று வாழாநிற்க, அமுதங் கொடுத்த ஒருத்தன் துன்புற்றிறந் தான், இது அதிபரிதாபமானதென்பான், 'இன்னமிர்தீந்த உன்னால் அமரர் யாரும் எஞ்சலர் இருந்தார். நீயோ துஞ்சினை!' என்றான்.

எக்கொடையாளரும், தாம் கொடுக்கும் சாதாரணமான பொருளை யும், தமக்கென ஒருபகுதியும்வைத்துக்கொள்ளாது முழுதுங் கொடார். வாலியோ, மிகவும் அபூர்வமும் அருமையுமானதாய்த் தன்னைக்கொண்டா ரைச் சாவாதுபுரக்கும் தேவாமிருதத்தைத் தனக்கென ஒரு சிறிதும் வைத்துக்கொள்ளாமல் முழுதும் கொடுத்தவனாய் இறந்தவனாதலால், அவன் 'தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளன்' ஆகவாழ்ந்து தன் உயரிய உதாரசீலத்தை உலகறியச்செய்தா னென்பான் 'அமரர் யாரும்—எஞ்சலர் இருந்தார் உன்னால் இன்னமிர்தீந்த நீயோ-துஞ்சினை'என்றானெனலுமாம்.

இவ்வாறு, கொள்வோர் சிரஞ்சீவித்துவமும் கொடுப்போர் மரண மும் அடையும்படியாகக் கொடுக்கும் கொடையாளர் எக்காலத்தும் எத் தேசத்தும் இருந்ததில்லை யென்பது இனிது விளங்க, 'வள்ளியோர்கள் நின்னில் யார் சொல்லற் பாலார்' என்றான்.

அதிகமான் என்னும் வள்ளல் தனக்கு அரிது கிடைத்த அமிர்தத் தன்மையுடைய கருநெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவைக்குக் கொடுத்தானென்ற வரலாறு ஒன்று உளதாக, வ்ள்ளியோர்கள் நின்னில் யார் சொல்லற் பாலார்' என்றது பொருந்துமோவென்னில், பொருந்தும்; அது இராமாயணகாலத்துக்குப் பிற்பட்டதாதலாலெனக. விவகாரத்துக் காக, அது முற்பட்டதாக வைத்துக்கொண்டாலும், அதிகமான்கொடை, வாலி கொடைக்குப் பிற்பட்டதேயாம்: எதனாலெனில், கூறுதும்:—

அதிகமான் அடைந்த கருநெல்லிக்கனி, ஒருவருக்கே சாவைத் தடுக்கப் போதியதாய், அவன் தானுண்டால், ஔவைக்குக் கொடுக்க முடியாததாயிருந்தது. அப்படியன்றி, வாலி பெற்ற அமுதம், மிகப்

பெருந் தொகையினரான விண்ணவ ரனைவரும் விரும்புமளவு புசித்தபின் மிகவு மிகுதியாகமிஞ்சும் பேரளவினதாய்ப் பின்னர் இந்திரன் ஆளுகையி லுள்ளதாயிருந்தது. ஆயினும், வாலி, அப்படி மிஞ்சுவதாயிருந்த அமுதத்தில் ஒரு சிறிதும் தனக்கெனவைத்துக்கொள்ளாமல் முழுதுங் கொடுத்துவிட்டதனல், அவன்கொடை அதிகமான்கொடையினும் அதிகமானதென்பது தெளிவு.

வாலி இறக்குந் தருணத்தி விருத்தல்கண்டு, அவன்மகன் வருந் திப் புலம்புதலாய், 'எந்தையே' என்பது முதலாகப் 'பஞ்சின்மெல் லடி யாள்' என்பது இறுதியாகவுள்ள இந்த நனியினிய நலமந்தமில்லாத நான்குபாட்டுக்களும், சுக்கிலபக்கத்தின் ஈற்று நாற்றிதிச் சந்திரன்கள் போல, எல்லாம் இனியனவாய்ச் சோபானக் கிரமமாக ஒன்றுக்கொன் றுயர்ந்த இன்பம் பயப்பனவாய்ப், படிக்குந்தோறும் படிக்குந்தோறும் புதுப்புதுப் பொருள்கள் புலப்படுப்பனவாய் எத்தனைமுறை படித்தா லும் இன்சுவை வளர்தலோடு தெவிட்டாமையுடையனவாய்ச் சிறந்த இன்கவிகளிற் சிறந்தவற்றிற் சிறந்தவற்றைச் சேர்ந்தனவாயிருத்தல், பலமுறை படித்துப்பார்த் தறிதற்பாலது.

வாலி அங்கதனை "வருந்தவேண்டியதில்லை" யென்று மார்போடணைத்தல்.

[இவ்வாருகவும், இன்னும் பலவாருகவும், வாலியின் சிறந்த குணங் களை அங்கதன் எடுத்துக்கூறி யிரங்கி வருந்த, வாலி, அவனை "வருந்த வேண்டியதில்லை" யென்று தேறுதல்கூறி, மார்போடணைத்து "உயிர் களுக்குப் பிறப்பும் இறப்பும் தொன்றுதொட்டுள்ளவை. பிறப்புண்டா யின் இறப்புண்டாம். யான் என்றேனும் எப்படியேனும் இறக்கவேண் டியவன்தானே. எனது நல்வினைப்பயனுக இன்று எனக்கு இந்த நன் முடிவு கிடைத்தது. சருவசாட்சியான இறைவனே, என் தவத்துக்குத் தானே நேராகப் பலனளிப்பானுய், இராமனுகவந்து என் உடற்பாரத்தை யொழித்து முத்தியளித்தருளினன்" என்று பின்னுங் கூறுகின்றுன்.]

அங்கதனுக்கு வாலி அறிவுறுத்தல்.

490 "பாலமை தவிர்நீ, எண்சொல் பற்றுதி யாயில், தன்னின்
மேல்ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள், வில்லுந் தாங்கிக்,
கால்தரை தோய நின்று கண்ணுக்கும் எளியன் ஆனுன்!
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்கு மைந்த."

இ - ள். "மகனே, சிறுபிள்ளைத்தனத்தை விட்டுவிடு. என் சொல்லை (உறுதியாக) ப் பின்பற்றுவாயானால், (கேள்.) தனக்கு மேலாக ஒருபொருளுமில்லாத (ஒரே) உண்மைப்பொருள் (ஆன பரம்பொருள்) வில்லை ஏந்திப் பாதங்கள் பூமியிலே படிய நின்று கண்ணுக்கும் (புலப் படும்படி) எளியனானான். (இந்தக் காட்சியைக் காணுதற்கு நாம் செய்த புண்ணியம் இருந்தவாறு என்னே!) மயக்கத்தை உண்டாக்குகின்ற பிறவி நோய்க்கு மருந்தென்று (இந்த ராமமூர்த்தியை) வணங்குவாயாக" (என்றான் வாலி).

•பாலமை - பாலர் தன்மை - பால்யகுணம். பிள்ளைமையென வழங்குதலும் உண்டு. தவிர் - நீங்கு. இந்தப் பொருளில் தவிர் ஏவல். பாலமை தவிர் நீ என்பதற்கு "இளமைப்பருவத்தின் தன்மையைக் கடந்த நீ" என்றும் பொருள். இந்தப்பொருளில் 'தவிர் நீ' வினைத் தொகை. பற்றுதி - பற்றுவாய். மெய்ப்பொருள் - பரம்பொருள். கடவுளையுணர்த்தும் மெய்ப்பொருள், சொல்லால் அஃறிணையாய்ப், பொருளால் உயர்திணையாய் 'ஆனான்' என்னும் உயர்திணைமுடிவுகொண்டது. மால் - மயக்கம்; வேட்கை - அவா - ஆசை. மால்தரும் பிறவி— அவாவினால் உண்டாகும் பிறப்புக்களெனினுமாம். 'அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவாப் பிறப்பீனும் வித்து' என்றார் பிறரும்? தொடைநோக்கிக் 'கால்தரை' 'மால்தரும்' என்பவை 'காறரை' 'மாறரும்' எனச் சந்திசேர்க்கப்படவில்லையென்பது காண்க? பற்றுதி யென்னினைய, கட்புலக்குற்றதம்மா என்பனவும் பாடங்கள்.

'வில்லும்தாங்கி' என்பதில் உள்ள உம்மை, அரூபப்பொருள் உருபப்பொருளானமையோடு வில்லையும் ஏந்தியதென்பதை உணர்த்தியது. 'கண்ணுக்கும்' என்பதில் உள்ள உம்மை, கருதரிய பொருள் காணுதற்கும் எளியதானதென்பதை யுணர்த்தியது.

அங்கதனுக்குச் சனகபிதாவான வாலி, இந்தச் சந்தர்ப்பத்தில் ஞானபிதாவாய்த், தான் அடைந்த ஞானச்செல்வத்தை அளிப்பானாய் 'யான் சொல்லப்போவது முக்கியமானது. அதனை அவதானித்துக் கேட்டற்கு விளையாட்டில் நோக்காய்க் கவலையில்லாமலிருக்கும் சிறுபிள்ளைத்தனத்தை விட்டுவிடவேண்டும்' என்பான் 'பாலமைதவிர் நீ' என்றான். கடவுளாகிய பொருளுக்கு மேலானபொருளில்லை;

மற்றெல்லாப்பொருள்களும் தோற்றப்பொருள்களன்றி உண்மைப் பொருள்களல்ல; கடவுட்பொருளொன்றே உண்மைப்பொருள் என்பான் 'தன்னின் மேலொருபொருளுமில்லா மெய்ப்பொருள்' என்றான். தன் அருள் சாராதார் எத்துணைப் பேரறிவாளரெனினும் அவர்க ளறிவுக் கெட்டாத அருமையுடைய பரம்பொருள் சாதாரணமனிதர்கண்ணுக்கும் புலனாம்படி எளிமையுடையதாய்க் கையில் வில்லேந்திக் கால் பூமி தோய மனிதவடிவமானது ஆச்சரியம்! என்பான் 'வில்லும் தாங்கிக் கால்தரை தோயநின்று கண்ணுக்கும் எளிய னானான்!' என்றான். 'வில்தாங்கி' எனவே, வில்லேந்தும் கை பெறப்பட்டுக், கைபெறப்படவே, கரசரணாதி அவயவங்களுடைய வடிவம் பெறப்படுமாயினும் அவ்வடிவம் 'கால்நிலம் தோயாக் கடவுள்' வடிவமாகவேனும் கால் நிலம் தோயும் மனித வடிவமாகவேனு மிருக்கலாமென்ற ஐயம் நீங்கவும் ஒருவருங்காணாத அரூபப்பொருள் உரூபப்பொருளாக மாறுங்கால் சிலரே காணும் தேவ ரூபமாகும் சௌலப்பியத்தைக் கடந்து அதனினும் அதிக சௌலப்பிய மாய் எல்லாரும் காணும் மனிதரூபமாயினதென்பது விளங்கவும் 'கால் தரை தோய நின்று' என்றான். அப்படி நின்ற இராமமூர்த்தியை, வேறெவ்வாற்றானும் தீர்க்க முடியாத பிறவிநோயைத் தீர்க்கும் மருந் தென்று மனத்துட்கொண்டு வணங்குவாயாக என்பான் 'மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்குமைந்த' என்றான்.

அங்கதனை இராமனுக்கு அடைக்கலமாக ஒப்பித்து வாலி முத்தியடைதல்.

இராமனை வணங்கும்படி அங்கதனுக்குக் கூறிய வாலி, இராமனை நோக்கி "இவன் இராக்கதராகிய பஞ்சுக்கு அக்கினியானவன்; உத்தம குணமும் ஒழுக்கமும் உடையவன். உன் அடைக்கலம்" என அங்கதன் வணங்கத் தன் உடைவாளை நீட்டி, "நீ இதைக் கைக்கொள்வாயாக" என்று இராமன் கொடுக்கக் கண்டு, இனி இத் தேகத்தைக்காத்திருக்க வேண்டியதில்லை யென்றெண்ணி, உருவிப்போகவிடாது தடுத்துப் பிடித்திருந்த பாணத்தையும் தேகத்தையும் கைவிட்டுச், சீவன்முத்தி நிலை நீங்கி விதேகமுத்தனானான்.

வாலிவதைப்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

உம்முந்தாகு மிடனுமா ருண்டே.

செந்தமிழ்ப்பத்திரிகை 28-ஆம் தொகுதி 9 ஆம் பகுதியில் உந் தீற்றுவினைச்சொல் என்று தலைப்பிட்டு வரைந்த கட்டுரையை ஆராய எழுந்தது இவ்வியாசம். கட்டுரையாளர், "உம்முந்தாகு மிடனுமா ருண்டே" என்ற சூத்திரம் பெயரெச்சத்திற்கேபாம் பெயரெச்சத்திற் கும் முற்றிற்கும் ஆகா, என இரண்டுகாரணங்களால் மறுக்கின்றனர். இதுவே கட்டுரையின் முடிந்த பொருளாம்.

அக்காரணங்களாவன:—உரையாளர்கூற்றும், சூத்திரமுறைவைப்புமாம்.

உரையாசிரியர் என யாவராலும் புகழ்ந்துகூறப்படும் இளம்பூரண வடிகள் எச்சத்திற்கென்றாவது, அன்றி முற்றிற்கென்றாவது அறுதி யிட்டுக்கூறினாரில்லை; இரண்டனையும்பெறவே பொதுப்படக்கூறிச்சென் றனர். கட்டுரையாளர் நன்னூற்குரையிட்ட மயிலைநாதர், சங்கரநமச் சிவாயர், இலக்கணவிளக்க வாசிரியர் ஆகிய இவர்கள், இளம்பூரண அடி கள் காட்டிய "நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து" என்ற உதாரணத்தைப் பெயரெச்சமாகக் கொண்டனர்; ஆதலின் உரையாசிரியரும் பெயரெச்ச மெனக்கொண்டு சூத்திரம் பெயரெச்சத்திற்கே உரியது என்று கூறியிருத் தல்வேண்டுமென்கின்றனர்.

இலக்கணவிளக்கவாசிரியர் நன்னூலாரின் சூத்திரத்தை அங்ஙன மே கொண்டனர். உரையில் பெயரெச்சத்திற்கென்றாவது, அன்றி முற்றிற்கென்றாவது ஆணையிட்டுக் கூறினதாகத்தோன்றவில்லை. உதா ரணம் எச்சதிற்கும் முறறிற்கும் காட்டியுள்ளனர். ஆதலின், இவர் எச் சத்திற்கே கூறினார் என்று கூறவியலாது.

இனி, நன்னூற்சூத்திரத்தை நோக்குவாம்:

"செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலுஞ்
செய்யுளு ளும்முந் தாகலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே."

இச்சூத்திரத்தின்கண் மூன்று விடயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன:—செய்யும் என்னும் பெயரெச்சத்தின் ஈற்றுயிர்மெய் சேறலும், உம் செய்யுளுள் உந்தாகலும், முற்றேல் உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் என்பனவாம். எச்சமும் முற்றும் தனித்தனிக்கொள்ளுமவற்றைத் தனித்தனி பிரித்துக்கூறி இரண்டிற்கும் ஏற்ப, "செய்யுளுள் உம்முந்தாகலும்" எனப் பொதுப்பட இரண்டிற்கும் இடையே வைத்தனர் எனக் கூறுவர் ஓர் அறிஞர். இங்ஙனமே, "றவ்வொடுகாவும்மை...............ஏற்கு மீங்கே." (நன். 145) என்ற சூத்திரத்தில் செய்யும் என்பதனை இரண்டிற்கும் ஏற்பக் கூறினர். இங்ஙனங் கொள்ளாக்கால், "செய்த செய்கின்ற செய்யும்.........பெயரெச்சம்மே" (நன். 340) என்ற சூத்திரத்தில் செய்யும் என்பது எதிர்காலத்தைக்காட்டும் என்பது பெறப்படாது. எனவே, இலக்கணவிளக்கவாசிரியர் நன்னூலார் எச்சத்திற்கென்று கூறினர் என்று கட்டுரையாளர் வரைந்தது பொருந்தாதாயிற்று.

நன்னூல் உரையாளர் எச்சத்திற்கென்று கூறியது உண்மையே; இதனானே முன்னோர் தவறுதவழியும் பின்னோர் தவறின் முன்னோரும் தவறினர் என்பது எத்துணைவலியுடைத்து ?

தெய்வச்சிலையார் "உம் என்பது உந்து என விரிந்து நிற்கவும் பெறும் இடமும் உண்டு" எனப் பொதுப்படப் புகன்றனரேயன்றி, எச்சத்திற்கென்றுவது முற்றிற்கென்றுவது கூறினாரில்லை; "ஒரு பொருள்மேல் உம்மையடுக்கியவழி என்றுகொள்க" என்பதே அவர் நோக்கம்; ஆதலின், அங்ஙனம் அடுக்கிவந்த (புற. 24) பாட்டை உதாரணமாகத் தந்தனர். உதாரணம் பெயரெச்சமாயிருத்தலின் பெயரெச்சமே கொண்டார் என்பது பொருந்தாது.

சேனாவரையர் உரையில், 'இடனுமாருண்டே என்பதனால் இத்திரிபு எச்சத்திற்கீறுயவழிப்போலும்' என்றும் நச்சினார்க்கினியர் உரையில், 'இடனுமாருண்டே என்றது இத்திரிபு எச்சத்திற்கே' என்றும் காணப்படுகின்றன. சேனாவரையர் எச்சத்திற்கே என்று கொண்டிருப்பாராயின், எச்சத்திற்கேபோலும் என்று கூறவேண்டா. இலக்கியக் கடலை நிலைகண்டுணர்ந்த நச்சினார்க்கினியர் இலக்கியங்களில் ஆங்காங்குச் சொன்முடிபுகளை முடித்துக்காட்டும் நேர்மையை நோக்கின், அவர் அங்ஙு

னம் முற்றை யெச்சமெனக் கொள்ளாரென்பதும் சேனுவரையர் சூத்திரங்கட்கு உரைவகுக்கும்பான்மையையும் சொற்களை முடித்துக்காட்டும் வன்மையையும் நோக்கின் முற்றை யெச்சமெனக்கொள்ளாரென்பதும், ஆய இவற்றை யுட்கொண்டு டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்கள் சேனுவரையத்திலும் நச்சினர்க்கினியத்திலும் உள்ள வாக்கியங்கள் இடைச்செருகல் என்ற முடிபிற்கு வந்தனர்போலும். ஆயினும், 'நன்னூல் படித்த மாணவனுல் இடைச்செருகப்பட்டது' என்று கூறியது பொருந்தாது. 'நன்னூலுரை படித்த மாணவனுல் இடைச்செருகப்பட்டது' என்று கூறியிருத்தல்வேண்டும். யான் மேலே காட்டிய நன்னூற்சூத்திரவுரையால் அது விளங்கும்.

அஃது எங்ஙனமாயினும் ஆகுக. இடைச்செருகலா என்பதைப் பற்றி மேலும் ஆராய்வோம்:

தென்மொழி வடமொழிக் கடலை நிலைகண்டுணர்ந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிகரவர்கள் தமது இலக்கணக்கொத்துரையில், "ஆதி யென்றதனுல் செய்யும் என்னும் வாய்பாடு பொதுமுற்றாயும் எச்சமாயும் நிகழ்காலமாயும் எதிர்காலமாயும் முன்னிலை யுயர்திணைப்பன்மைச் சிறப்புமுற்றாயும், உயிரும் உயிர்மெய்யுங் கெடுதலும், உந்தாகலும் போல்வனவெல்லாம் கொள்க" என்று எச்சத்திற்கும் முற்றிற்கும் பொதுப்படக் கூறினர்.

இவர் பயின்ற சேனுவரையத்திலும் நச்சினர்க்கினியத்திலும்மேல் இடைச்செருகல் என்று கூறிய வாக்கியங்கள் இருந்திருப்பின், தமது இலக்கணக்கொத்துரையில் பிறிதோரிடத்தில், "இங்ஙனம்வரும் செய்யுட்கெல்லாம் நச்சினர்க்கினியர், சேனுவரையர் பரிமேலழகர், உரையாசிரியர் முதலாயினேர் முற்றாயும் எச்சமாயும் பொருள் உரைக்கின் வழுவாமென்றுகருதி வியங்கோட்பொருட்டென்றும் விதிப்பொருட்டென்றும் தகுதிப்பொருட்டென்றும் வேண்டுவதென்றும் தமக்குவேண்டியவாறே பொருள் எழுதிச் சொற்குணம் வீளாபோயினர்" என்று மறுக்கும் இயல்புடையார், தமது மதத்திற்கு மாறுபட்டவிடத்துக் கண்டிக்காதிரார் என்பது ஒருதலை. எனவே சேனுவரையத்திலும் நச்சினர்க்கினியத்திலும் உள்ள எச்சத்திற்கேபோலும்; எச்சத்திற்கே என்ற வாக்கியங்கள் இடைச்செருகல் என்பதும் அவ்விடைச் செருகலும் இலக்கணக்கொத்துக்காருக்குப் பிற்பட்டதே என்பதும் பெற்றும்.

மேற்கூறியவற்றால் தொல்காப்பியத்திற்கு உரைவகுத்த ஆசிரியர் பலரும் எச்சத்திற்கே கூறினரென்று பெறப்படவில்லை.

இனிச் சூத்திர வைப்புமுறையை ஆராய்வாம்:—கட்டுரையாளர், "அவற்றுள், செய்யு மென்னும்....புலவர்" (தொல். சொல். வினை. 41.) என்ற சூத்திரத்தின் பின்னர்வைத்திருத்தல்வேண்டுமென்று கூறிய டாக்டர் சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்கள் கூற்றுப் பொருந்தாதென விளம்புகின்றனர். தெய்வச்சிலையார் "பெயரெஞ்சு கிளவிக்கும்" என, உம்மைவிரித்துப் பாடங்கொண்டு முற்றிற்கும் அமைத்தாரென ஓர் காரணம் கூறுகின்றனர். "அவற்றுள், செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கும்" என்றதன்கண்ணுள்ள கிளவிக்கும் என்ற உம்மை அவற்றுள் என்றதனால், "பெயரெஞ்சு கிளவியும்........பொருணிலை திரியா" (தொல். சொல். வினை. 39.) என்னும் சூத்திரத்திலுள்ள வினையெஞ்சு கிளவியைக் கொள்ளுமேயன்றி வினைமுற்றைக்கொள்ளாது. ஆதலின், சேனாவரையர் நச்சினார்க்கினியர் ஆகிய இவர்கள் கொண்ட பாடமே ஏற்புடைத்து.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் (தொல். சொல். 41.) சூத்திரத்தின் உரையில் முற்றையுங் கொண்டனர். ஆதலின் ஈண்டே, "உம்முந் தாகு மிடனுமா ருண்டே" என்றசூத்திரத்தைக்கூறுகவெனின் உம்முந்தாகி அடுக்கிவரவேண்டுமென்பது பெறப்படாது; ஆதலின், எச்சத்திற்கும் முற்றிற்கும் ஏற்கவும் அடுக்கிவரவும் பொருந்துமாறு எண்ணும்மை அதிகாரப்பட்டவிடத்து இடையியலில் வைத்தனர். "அடுக்கிவர ஈண்டு வைத்தனர்" எனத் தெய்வச்சிலையாருங் கூறினர்.

மேலும், தொல்காப்பியர் பெயரெச்சத்தைமாத்திரம் கொள்ள வேண்டியவிடத்து "அவற்றுள், செய்யுமென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு......................புலவர்" (தொல். சொல். வினை. 41,) பெயரெஞ்சு கிளவியென்ற சொல்லானும் முற்றைமாத்திரம் கொள்ளவேண்டியவிடத்து (தொல். சொல். வினை. 30 ல்.) பிரகாணத்தால் அறியுமாறும் எச்சமும் முற்றும் இரண்டனையுங் கொள்ளவேண்டியவிடத்து "முன்னிலை—உரிமைய" (தொல். சொல். வினை. 25) செய்யும் என்று பொதுவாயும் கூறியிருத்தல் காண்க. இவ்வைப்புமுறையை டாக்டர் சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்கள் 28-8-30 இந்து பத்திரிகையில் வரைந்த வியாசத்திற் காணலாகும்.

மேற்கூறியவாற்ருல் "உம்முந் தாகு மிடனுமா ருண்டே" என்ற சூத்திரம் பொது என்பது பெற்ரும்.

இனி, புறநானூற்றுச் செய்யுளை நோக்குவாம்:

"நெல்லரியு மிருந்தொழுவர் ... ... நின்றுவினிந்தோரே" (புறம் 24) என்ற பாட்டில்,

(1) தெண்கடற்றிரை மிசைப்பாயுந்து, (2) தண்குரவைச் சீர்தூங் குந்து (3) எல்வளைமகளிர் தலைக்கைதருஉந்து என அடுக்கிவந்து "மிழலை" என்ற பெயரைக் கொண்டுமுடிந்தன ஆதலின் இவை பெய ரெச்சமேயாம், முற்று ஆகா.

"மென்புலத்து வயலுழவர் ... ... வாழ்கவன்ருளே" (புறம். 395) என்ற பாட்டில் 'அரியலாருந்து' என்றதன்முன் ஒன் றரையடி சிதைந்துள்ளன. ஆதலின் எழுவாய் இன்னது எனக் கூற வியலாது.

"மனைக்கோழிப் பைம்பயிரினனே
கானக்கோழிக் கவர்குரலொடு
நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து
வேயன்ன மென்றோளான்
மயிலன்ன மென்சாயலார்
கிளிகடியினனே
யகலள்ளற் புள்ளிரீயுந்து
ஆங்கப், பலநல்ல புலநணியுஞ்"

இவற்றில் பெயர்க்குந்து, இரீயுந்து, ஆய இரண்டினையும் பெய ரெச்சமெனக்கொள்ளின் கொண்டுமுடியும் பெயர்ச்சொல்லைக் காணேம், ஆதலின் இவை முற்ருய் முறையே நீர்க்கோழி, புள், என நின்ற இரண்டு எழுவாய்களுக்கும் பயனிலையாயின.

"நெடுநீர நிறைகயத்துப்........வாழியவே" (புறம் 386) என்ற பாட்டில்,

"வயலே, நெல்லின்வேலி நீடியகரும்பின்
பாத்திப் பன்மலர்ப் பூத்ததும்பின
புறவே, புல்லருந்து பல்லாயத்தான்
வில்லிருந்த வெங் குறும்பின்று

கடலே, காறந்த கலனெண்ணுவோர்
கானற் புன்னைச் சினைநிலைக்குந்து
கழியே, சிறுவெள்ளுப்பின் கொள்ளைசாற்றிப்
பெருங்க னன்னாட் டுமென்னொலிக்குந்து
அன்னநன் னாட்டுப் பொருநம்யாமே''

இவற்றிலுள்ள தரும்பின, குறும்பின்று, என்றவற்றைப்போலவே 'நிலைக்குந்து', 'ஒலிக்குந்து', என்பனவும் முற்றேயாம். 'நிலைக்குந்து' 'ஒலிக்குந்து' ஆய இரண்டினைமட்டும் பெயரெச்சமெனின் கொண்டுமுடியும் பெயர்ச்சொல்லைக் காணோம். ஆதலின், தரும்பின, குறும்பின்று, நிலைக்குந்து, ஒலிக்குந்து, என்ற நான்கும் முற்றாய் முறையே, வயலே, புறவே, கடலே, கழியே, என்பனவற்றிற்குப் பயனிலையாயின. ஆகவே புறநானூற்றில் எச்சமும் முற்றும் பயின்றுவருகின்றன என்பது பெற்றாம்.

கட்டுரையாளர் இங்ஙனங்கொள்ளாது "பல்லோர்......கொள்ளார்" (தொல். சொல். வினை. 30) என்ற சூத்திரத்தொடு மாறுபடும் என்கின்றனர்; அங்ஙனம் மாறுபடுவது, தன்மைப்பெயர்ச்சொல், முன்னிலைப் பெயர்ச்சொல் பல்லோர் படர்க்கைப் பெயர்ச்சொல் ஆய இவற்றோடு முற்றாய்வரினன்றோ? அங்ஙனம் ஒன்றையும் காணோம். யாம் மேலே முற்றிற்குக் காட்டியவற்றைக் கண்டு தெளிக.

இவ்வாராய்ச்சியால் "உம்முந்தாகும்" என்ற சூத்திரம் தொல்காப்பியர்க்கும் உரைகாரர்களுக்கும், எச்சத்திற்கும் முற்றிற்கும் பொது என்பதே கருத்து என்பதும், இலக்கணக்கொத்துக்காரர், நன்னூலார், இலக்கணவிளக்கவாசிரியர் ஆய இவர்களுக்கும் அதுவே கருத்து என்பதும், சேனாவரையத்திலும் நச்சினார்க்கினியத்திலும் உள்ள வாக்கியங்கள் இடைச்செருகல் என்பதும், புறநானூற்றில் எச்சமும் முற்றும் பயின்றுள்ளன வென்பதும் பல்லோர் படர்க்கை என்ற சூத்திரத்தோடு மாறுபடுவதின்று என்பதும் தெள்ளிதின் விளக்கப்பட்டன.

வித்வான், பி. எஸ். வேதாசலையர்.

இயற்கையும் மனிதனும்.

P. N. அப்புஸ்வாமி, B.A., B.L., எழுதியது.

நாம் வாழும் இப்பூமியும், நமக்கு உஷ்ணத்தையும் ஒளியையும் தரும் சூரியனும், இரவில் பிரகாசித்து அழகுக்கே உவமையாகும் சந்திரனும், பல்வகையான இன்பதுன்பங்களையெல்லாம் நமக்கு அளிப்பனவென்று நாம் கருதிவரும் கிரகங்களும் மிகப் பழமையான ஒரு காலத்திலே, சொலிக்கும் தீக்காற்றைப்போலவும் ஒளி நிரம்பிய மேகபடலத்தைப்போலவும் மிகவும் பரந்து விரிந்து ஒன்றாகிக் கிடந்தன. அப்படியிருந்த அந்தத் தீக்காற்றானது முதலில் மெல்ல மெல்ல ஒருவாறு அசைந்து, பின்பு மேன்மேலும் அதிகரிக்கும் வேகத்துடன் சுழன்று சொலித்து விளங்கிற்று. பிறகு சிறிது சிறிதாக அது வெப்பத்தை இழக்கத் தொடங்கிற்று. அது அப்படி ஆறிக் குளிர்ந்துவரும்போது காற்றுப்போன்றிருந்த அப்பொருளானது சிறிதுசிறிதாகக் கடினமாகிக் கொண்டுவந்தது. நமது பூமியும் சூரிய சந்திராதிகளும் கிரகங்களும் அதினின்று பிறந்தன. அவ்வாறு பிறந்த இவ்வுலகமானது முதன் முதலில் தோன்றியபொழுது, நாம் அறிந்துகொண்ட அளவிலே, இதில் எவ்வகையான உயிரும் கிடையாது. உலகம் தோன்றிக் கோடிக்கணக்கான வருஷங்கள் ஆயினபின், இதில் எவ்வாறோ ஒரு சிற்றுயிர் தோன்றிற்று. மிகவும் ஆச்சரியகரமான இச்சம்பவமானது எவ்வாறோ திடீரென்று நிகழ்ந்தது. உலகம் தோன்றி வெகுகாலத்துக்குப் பின்பு அற்புதமாகப் பிறந்த உயிருக்குத் தான் தோன்றிய அதிசயம்போலவே தொலைந்துபோகாமல் வாழ்ந்து தங்கியிருக்கவேண்டிய முயற்சியானது பெரிய முயற்சியாக இருந்தது. பல்வகைப்பொருள்கள் நிறைந்த இவ்வுலகத்தில் துணை எவை? பகை எவை? என்று தேடி ஆராய்ந்து, துணையைக் கைப்பிடித்துப் பகையை விட்டொதுங்கி வாழ்வதற்கு

அரிய முயற்சி அவசியமாயிற்று. இவ்வாறு உயிரானது தான் அழிந்து போகாது நிலைநிற்கும்பொருட்டுச் செய்துவரும் அரும் பெரு முயற்சிக்குப் பிராணதாரப்போராட்டம் என்று அறிவாளர் பெயரிட்டிருக்கின்றனர். இப்போராட்டமானது என்றென்றும் நடைபெறுவது, ஓய்வொழிவற்றது, சிறிதளவும் இரக்கமற்றது, சற்றேனும் மாற்றவொண்ணாத சாசுவதமான விதிகளையுடையது. முதலில் தோன்றிய சிற்றுயிரானது இப்போராட்டத்தில் மூழ்கிக் காலக்கிரமத்திற் பல்வகையாக வளர்ந்து அற்புதமான பல்லாயிர உயிர்வகைகளாக உருவமாறுபாடு பெற்றது. இப்பொழுது உலகத்திற் காணப்படும் விந்தையான பல்லாயிர உயிர்ப்பிராணிகள் யாவும் இவ்வாறு தோன்றிய சிற்றுயிரினின்றும் பிறந்தவைகளே. இப் பிராணதாரப் போராட்டமானது இன்றும் தீவிரமாய் நடைபெற்றுவருகின்றது. ஆதலால் உலகத்திலுள்ள உயிர்ப் பிராணிகளெல்லாம் தம்மைச் சூழ உள்ள உலகத்தோடும் அதில் நடந்து வரும் நிகழ்ச்சிகளோடும் எவ்வாறு ஒத்துப்போவது என்பதை நன்கு கருதவேண்டியதாகிறது. சூழ உள்ள பிரதேசத்தின் நிலைமையையும், அதன் குணங்களையும், அதில் நாள்தோறும் நிமிஷந்தோறும் நடந்து வரும் நிகழ்ச்சிகளையும் ஒருங்குசேர்த்துச் 'சூழல்' என்று ஒருவாறு குறிப்பிடலாம். தன் சூழலுக்கு ஏற்ப நடந்தால்மட்டிலுமே உயிர் தங்கிநிற்கக்கூடும். இல்லாவிடில் உயிர் தான் அற்றுத் தன் இனமும் அற்றுப்போகவேண்டியதாகும். தன் சூழலுக்கு இணங்கி நடக்கத் திறமையில்லாததால் பல்வகைப் பிராணி வருக்கங்கள் வேரோடு அழிந்து போய்விட்டன. வேறு சில இனங்கள் அவ்வாறு இணங்காததால் அழிந்துபோய்க்கொண்டிருப்பதை நாம் இக்காலத்திலும் கண்கூடாகக் காணலாம்,

ஒவ்வோருயிரும், தன் சுபாவத்துக்கு ஒத்தபடி, தான் வாழ்வதற்கு வேண்டிய இன்றியமையாச் சௌகரியங்களைச் செய்துகொண்டாலன்றி இவ்வுலகில் தங்கிநிற்க இயலாது. சுற்றியுள்ள உலகிலிருந்து தனக்கு உரிய உணவைத் தேடவேண்டும், தன் இனத்துக்கு ஒத்த

நண்பரோடு இணங்கி நடந்து அவரைக் காப்பாற்றும் முறைகளையும் தேடவேண்டும். தன் இனத்துக்குப் பகையான உயிரினத்தைத் தான் அணுகாமல் விலகியோ அல்லது எதிர்த்துப் போராடித் தொலைத்தோ தன் இனத்தைப் பாதுகாக்கவேண்டும். கேவலம் தங்கி நிற்பதோடு அமையாமல் மேன்மேலும் வளர்ந்து பெருகவேண்டிய முறைகளைப் பின் பற்றுவதுதான் தன் இனத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்கான சிறந்த உபாயமாகும். இதையொட்டியே மீன்கள் லக்ஷக்கணக்கான முட்டைகள் இடுவதும் சிற்சில செடிவகைகள் பல்லாயிரக்கணக்கான வித்துக்களை உண்டாக்குவதும். விலங்கு பக்ஷி மீன்-இனங்கள் ஒவ்வொன்றும் தத்தம் குட்டி குஞ்சுகளுக்குத் தற்காத்துக்கொள்ளுவதற்கு வேண்டிய அறிவை விளையாட்டுமுறையாகப்புகட்டுவதும், அக்குட்டி குஞ்சுகள் அவ்வறிவை அளவற்ற அவாவுடன் கற்றுக்கொள்வதும் நாம் யாவரும் அறிந்த விஷயம்.

நமது உலகமானது மேலே கூறியபடி எக்காலத்திலும் ஒரேமாதிரி இருப்பதில்லை. முன்னொருகாலத்தில் தீ ஆவியாலும், பின்பு நீர்போன்று உருகிய பொருளாலும், இப்பொழுது காற்று, நீர் கடினம், ஆகிய மூவகைப்பொருளாலும் அதன் அமைப்பு நிகழ்ந்துளது. ஒருகாலத்தில் உலகில் எங்கும் நீர் நிறைந்து வாயுமண்டலம் முழுவதும் நீராவி செறிந்திருந்தது. பின்னொருகாலத்தில் உறைபனியானது தரைமுழுவதையும் மூடியிருந்தது. இப்பொழுது உலகத்திற் சற்றேறக்குறைய நான்கில் ஒரு பாகமானது நிலப்பரப்பாகக் காணப்படுகிறது. அதுவும் ஒரே தன்மையாகக் காணப்படுகிறதில்லை. பலவிதப்பட்ட இயற்கைத் தோற்றங்களை உடையதாயும் பல்வகையான சீதோஷ்ணநிலைமைகளை உடையதாயும் காணப்படுகிறது. குளிர்ந்து உறைந்த பனிக்கட்டி மூடிய தரையும், காடு மரங்கள் செறிந்த இடமும், ஓங்கி உயர்ந்த மலைகளும், பாய்ந்தோடிச் செல்லும் ஆறுகளும், இடைவிடாது உருண்டு புரளும அலைநிறைந்த கடலும், வெடிக்கும் எரிமலையும், பொசிக்கும் தீக் காற்றுக்கள் உலவும் பாலைவனமும் அதில் ஆங்காங்குக் காணப்படுகின்

றன. இவை அனைத்திலும் உயிர்ப்பிராணிகள் வாழ்கின்றன. ஆங்காங்குள்ள பிராணிகள் அவ்வவ்விடங்களுக்கு ஏற்றபடி தாம் உயிர்தரித்தற்குரிய சாதனங்களைத் தேடி அமைத்துக்கொண்டிருக்கின்றன.

இவ்விஷயத்தில் மீன் விலங்கு பக்ஷி இனங்களுக்கும் மனித இனத்துக்கும் உள்ள முக்கியமான பேதம் ஒன்று கவனிக்கத்தக்கது. இக்கீழ்வகை உயிர்கள் எல்லாவற்றுக்கும் அவை இயற்கையோடு ஒத்து நடக்கவேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அவை யாவும் இயற்கையை மாற்ற வலியற்று அதனோடு ஒருவாறு இணங்கியே போகின்றன. இயற்கைக்கு மாறாகவோ இயற்கையை மீறியோ அவை நடந்தால் அதற்குச் சரியான தண்டனையை உடனே அல்லது காலக்கிரமத்திலோ அவை பெறுகின்றன என்பது திண்ணம். பெரும்பான்மையும் உயிரினங்கள் இயற்கையோடு ஒத்து நடக்கவேண்டி அதற்குத் தகுந்தபடி தமது உடலையே பலவாறு மாற்றியமைத்துக்கொண்டன. ஆகாயத்தில் அழகாய்ப் பறக்கும் பறவைகள் தமது கைகளைப் பறிகொடுத்து, அவற்றைச் சிறிது சிறிதாக மாற்றி, இறக்கைகளாக்கிக் கொண்டன. தம் உடலிலுள்ள எலும்புகளை மெலிவடையச்செய்து அவற்றின் கனத்தை இயன்றவரை குறைவாக்கிக்கொண்டன. நிலத்தில் ஓடிவாழும் மிருகங்கள் தமது ஓட்டத்தைத் தடைப்படுத்தும் தம் கால்விரல்களைப் பறிகொடுத்துவிட்டன. இதற்குக் குதிரையை உதாரணமாகக் கூறலாம். முன்னொருகாலத்தில் ஒவ்வொரு காலிலும் ஐந்து விரல்களையும் நகங்களையும் பெற்றிருந்த இவ்விலங்கு நாளடைவில் ஒவ்வொரு விரலாக இழந்து இப்பொழுது குளம்பு எனப்படும் ஒரே விரலையுடையதாக இருக்கிறது. நீருள் நீந்திவாழும் மீன்கள் நீந்துவதற்குப் பயனற்று இடையூறே விளைக்கும் கை கால் முதலிய உறுப்புக்களை இழந்து அவற்றுக்குப் பதிலாகத் துடுப்புப்போன்ற ஓர் உறுப்பையும் விரிந்த வாலையும் பெற்றுக் களித்திருக்கின்றன. தவளையினம் நீரில் நீந்துவதற்கும் நிலத்தில் நடப்பதற்கும் பொதுவான உபாயம் ஏதென்று

தேடி அதை அதன் அறிவுக்கும் மற்றக்குணங்களுக்கும் ஏற்றவாறு கண்டுபிடித்திருக்கிறது. தவளையின் கால்விரல்கள் ஒன்றோடொன்று ஒருவகை ஜவ்வினால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. விரலை அகற்றி நீரில் நீந்தியும் விரலை நெருக்கி நிலத்தில் நடந்தும் அது ஒருவாறு இரு வகையிடத்திலும் வாழ்ந்துவருகிறது. குளிர் மிகுந்து உடல் நடு நடுங்கும் நாடுகளிலுள்ள மீன் விலங்கு பக்ஷி இனங்கள் குளிரைத் தாங்கவல்ல கொழுப்பு, உரோமம், இறகு முதலியவற்றை முறையே பெற்று உயிர்தரித்துவருவதைக் காணலாம். இம்மாறுபாடுகள் யாவும், கீழ்த்தர உயிரானது தன் உடலை மாற்றியமைத்துக்கொண்டு மாற்ற ஒண்ணாதது என்று அது கருதும் இயற்கைக்கு இணங்க நடப்பதன் பொருட்டு அது கற்றுக்கொண்ட கல்வியின்பயனே ஆம்.

மனிதனோவெனில் இவ்வாறு நடப்பதில்லை. அவனுடைய சிறந்த புத்தியின் துணிவை என் என்று சொல்வது? இயற்கையாக நடக்கும் ஒவ்வொரு பெருநிகழ்ச்சியும் முதன்முதலில் அவனுக்கு ஆச்சரியத்தையே தந்தது. ஆயினும், நாளடைவில் அவனுடைய தெள்ளிய அறிவால் ஒவ்வொருநிகழ்ச்சியையும் அதன் காரணத்தையும் அவன் சிறிது சிறிதாக ஆராய்ந்து அறிந்து பிறகு இயற்கையின் பலாபலன்கள் அவனுக்கு ஒருவாறு தெரிந்ததும் இயற்கையை மீறி நடக்கத் துணிந்துவிட்டான். வானில் பறக்கவும், நீரில் நீந்தவும் நிலத்தில் ஓடவும் துணிந்த அவன் தன் உடலைச் சிறிதளவும் மாற்றியமைத்துக் கொள்ளவில்லை. உலகத்திலுள்ள பல்வகையான உலோகங்களைத்தேடித் தெரிந்து அவற்றால் மிகவும் விந்தையான இயந்திரங்களைச் செய்து அவற்றைத் துணைக்கருவிகளாக்கிக்கொண்டான். அவற்றின் உதவியைக்கொண்டு இயற்கைக்கு மாறாக நடக்கத்தலைப்பட்டான். இதோடு நிற்காமல் இயற்கையின் உடலையே தனக்கு வேண்டியபடியெல்லாம் மாற்ற அவன் துணிந்தான். வீடும், மாளிகையும், வாய்க்காலும்,

கிணறும், குளமும், சோலையும், துறைமுகமும், இருப்புப்பாதையும், பாலமும் இவைபோன்ற பிற அனைத்தும், இயற்கையின் உடலை அவன் மாறுபடுத்துகின்ற விந்தையைச் சிறிது காட்டுகின்றன. நீரால் நெருப்பையும், நெருப்பினால் குளிரையும், காற்றால் வெப்பத்தையும், பற்பல இயற்கைச் சக்திகளின் உதவியால் தூரத்தையும் காலத்தையுமே அவன் வென்றான். இயற்கையோடு இடைவிடாது போராடி, அதன் வலிமை குறைவுகளை நன்கு அறிந்து, அதைத் தன்னோடு மிகுதியும் இணங்குவித்துத் தான் அதற்கு இணங்க ஒரு சிறிதளவு நடந்துகொள்வதே மனிதன் தேர்ந்தெடுத்த சிறந்த துணிவான தற்காப்புமுறை.

விலங்குகள் பின்பற்றிவரும் வழியைக்காட்டிலும் இவ்வழியே மேன்மையானது என்பது நிச்சயம். ஆயினும், இது மிகவும் துணிகரமானது, பற்பலவகையான ஆபத்துக்களை விளைவிக்கவல்லது. ஆதலால் இவ்வழியை நாம் பின்பற்றவேண்டுமாயின் இயற்கையைப்பற்றியும் அதன் தன்மைகளைப்பற்றியும இயற்கைவிதிகளைப்பற்றியும் நன்கு தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். இயற்கையின்விதிகளைத் தெரிந்துகொண்டாலன்றி இயற்கையை நம்மோடு ஒத்துப் போகும்படி இணக்கிக்கொள்வது எளிதாகாது.

இவ்வாறு இயற்கையோடும், நமது சூழலோடும் ஒத்துவாழ்வதற்கு உரிய அறிவையே கற்பிப்பது கல்வியின் முதல் நோக்கமாக இருக்க வேண்டும். ஆகவே, நமது இனமாகிய மனித இனத்தின் தற்காப்பை நாடும் ஒவ்வொருவனும் நமது சூழல் எத்தன்மையது ? நமது இயற்கை யாது ? சூழலோடு நாம் எவ்வாறு எவ்வளவு இணங்கி நடப்பது ? சூழலை நம்மோடு எவ்வாறு இணக்குவது ? என்பனவற்றை நன்கு தெரிந்துகொள்ளுவது அவசியமாகும்.